## டிசம்பர் - 3

**"என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்."**

**- வெளி 3 : 10.**

இப்பொழுதுள்ள லவோதிக்கேயா காலத்தில் பொறுமையுடன் கூடிய சகிப்புத்தன்மையோடு ஓட்டத்தை ஓடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு இது (இந்த வாக்குதத்தம்) விசேஷித்த பரிசாயிருக்கிறது. சோதனைக் காலத்திற்குத் தப்புவது நம்முடைய சலுகையாக இல்லாதிருந்தபோதும் நம்முடைய கர்த்தர் வந்திருத்தலின் சமயத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிறதின் பலனாக சமநிலையாக்குகிற ஒரு விசேஷித்த ஆசீர்வாதத்தை உடையவர்களாயிருப்பது நம்முடைய சலுகையாயிருக்கிறது. நாம் அவருடைய ஐக்கியத்தையும், போதனையையும் உடையவர்களாயிருந்து இப்பொழுது "ஏற்ற வேளையின் போஜனமாயிருக்கிற" ஆவிக்குரிய ஆகாரத்தை கடந்த காலங்களின் விசுவாசிகளில் ஒருவரும் அனுபவித்திராத வகையிலும் அளவிலும் அவர் பகிர்ந்து கொடுக்கிறதினால் பங்கு கொள்ளுகிறோம். ஆனால் நாம் எதிர்ப்பார்க்கிறபடி இந்த மாபெரும் தயவு முழு உலகத்தின் மேலும், வருகிற சோதனை காலத்தில் ஏற்படுகிற சோதனைகளின் தந்திரத்தினாலும் உக்கிரத்தினாலும், ஒத்தாற்போல் ஈடுசெய்யப்படுகிறது. பொறுமையுடன் கூடிய சகிப்புத் தன்மைக்கு எப்பொழுதாகிலும் அவசியமிருந்ததானால், அது இப்பொழுது அவசியமாயிருக்கிறது.

**- Z ’01, 118 (R 2790).**

இது சோதனைக்காலம் என்று அழைக்கப்படுகிறது ஏனென்றால், அது நீடிக்கும் காலம் முழுவதிலும், முழுமனிதஜாதியையும் விசேஷமாக உண்மையான சபையையும் பேர் சபையையும் சிக்க வைக்கிற பெரிய சோதனைகள் நேர்ந்திருக்கின்றன. தேவனுடைய பெயரளவிலான ஜனங்களுக்கும் உண்மையான ஜனங்களுக்கும் இந்தச் சோதனைகள் விசேஷமாக பொதுவான ஆறு வழிகளில் கடுமையாக இருந்திருக்கின்றன. அதாவது, மீட்கும் பொருளின் உபதேசத்தை கைவிடுதல், நாஸ்திகம், சத்தியத்தின் முறைகளையும், பாபிலோனின் முறைகளையும் சேர்த்தல், சீர்திருத்தல், பொருத்தனையையும் சத்தியத்தையும் மறுத்தல், புரட்சி செய்தல் (அதிக பதவிகளைபெற புரட்சி) பிலதெல்பியா சபை இந்த விசேஷமான சோதனைகளுக்குத் தப்பியிருந்தாலும் லவோதிக்கேயா சபை இவைகளை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனபோதிலும், தன்னுடைய லவோதிக்கேயா சபையின் விசுவாசிகளுக்கு, தன்னுடைய பரோஸியா எபிபனி காலங்களுக்குத் தகுந்த வெளிச்சத்தில் கர்த்தர் விசேஷித்த உதவியை கொடுத்திருக்கிறார். சோதனை காலத்தில் புரட்சியின் அம்சம் "மிகுந்த பிரகாசமான" எபிபனியோடு ஒத்ததாக நடந்துக் கொண்டிருக்கிறது. இது இதையும் மற்ற அநேக காரியங்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது.

**- P ’36, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

வெளி 1:9; 13:10; 14:12; மத் 6:13; 26:41; 1கொரி 10:13; எபே 6:13; 2பேது 2:9; மத்24:24; ஏசா 24:17; தானி 12:10; யாக் 1:12; 1பேது 4:12.

**கோபுர வாசிப்பு :** Z ’16, 327 (R 5981).

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவைகளின் பலன் என்ன?